# செவிச்செல்வம்

## "Diploma in Community Radio & Mass Communication"

## Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

# CHAPTER 4 - HOW TO SETUP A COMMUNITY RADIO STATION

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# STRUCTURE OF A COMMUNITY RADIO

# சமுதாய வானொலி நிலையங்களின் கட்டமைப்பு

**CHAPTER- 4**
**EPISODE-18**

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# சமுதாய வானொலி நிலையத்தின் கட்டமைப்பு (*Structure of CR)*

- சமுதாய வானொலி நிலையத்திற்குப் பல்வேறு தொழில்நுட்ப சாதனங்கள் தேவைப்படுகின்றன.

- அவற்றுள் சில இன்றியமையாதன.

  சவுண்டு மிக்ஸர் (Mixer)

  ஒலிபெருக்கி (Mic)

  கணினி (Computer)

  ஹெட் போன்ஸ் (Head Phones)

- கணினியானது ஒலிபரப்பிற்கும், நேரடி (Live) நிகழ்ச்சிகளுக்கும் ஆடியோ எடிட்டிங்குக்கும் (Audio Editing) பயன்படுகிறது.
- நிலையம் வளர வளர அதிக அளவிலான சாதனங்கள் தேவைப்படுகின்றன.
- இணையதள வசதி அவசியத் தேவையாகவும் உள்ளது.

# அறை வசதிகள் *(Room requirements)*

- குறைந்தது 10X10 அளவுள்ள அறை தேவைப்படுகிறது. இதில் இரண்டு அல்லது மூன்று கணினிகள் வைப்பதற்கான இடம் அவசியம்.
- எடிட்டிங் அறை 10X10 என்ற இடப்பரப்பில்,கணினிகள் வைப்பதற்கான இட வசதியுடன் இருக்க வேண்டும்.
- நிலைய மேலாளர், இரண்டு RJ மற்றும் தன்னார்வலர்கள் இருந்து பணிபுரியக்கூடிய தேவையான இட வசதியுடன் இருக்க வேண்டும்.

## *Studio configuration Described by BECIL*

BECIL வகுத்துள்ள வழிமுறைகள்

- On Air Studio: இதற்கு நிகழ்ச்சி தயாரிக்கும் அறை என்று பெயர்.
- இந்த அறை

  Recording

  Editing

  Storage analog

  Digital Domains

போன்ற பணிகளை செய்வதற்கான வசதிகளுடன் கூடியதாக இருக்க வேண்டும்.

- கணினிகள், Compact Dics, Cassets,Players முதலான அனைத்து உபகரணங்களுடன் கூடியதாக இருக்க வேண்டும்.

## *Voice Over Booth* (கருத்தரங்க அறை)

- இந்த அறை  ஒலி மாசு இல்லாத அறையாக இருக்க வேண்டும்.
- பேசக் கூடியவற்றை பதிவு செய்வதற்குரிய வகையில் Acoustically treated ஆக இருக்க வேண்டும்.
- குறைந்தது 4 பேர் இருந்து பணிபுரியும் அளவுக்கு இட வசதி இருக்க வேண்டும்.
- உயர்ரக ஹெட்போன்கள்(Head Phones) கொண்டதாக இருத்தல் அவசியம். அப்போதுதான் ஒலியின் தரத்தை நிர்ணயிக்க முடியும்.

## நிகழ்ச்சி தயாரிப்பு அறை (Production studio)

- இது நிகழ்ச்சி தயாரிப்பு அறை.
- தரமான *Acoustic treament* செய்யப்பட்ட அறை.
- இங்கே நிகழ்ச்சிகளை வடிவமைத்து, நேரடியாக உடனுக்குடன் தயாரிக்க இயலும்.
- இங்கு *Recording, Editing, Storage* வசதிகள் இருக்க வேண்டும்.
- இது *On Air Studio*விற்கு மாற்றாகவும், அவசர காலங்களில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும்.

# ஒலிபரப்பியின் தரம் (*Transmitter Configuration*)

- டிரான்ஸ்மீட்டர் (Transmitter) என்னும் ஒலிபரப்பி தான் CRSன் உயிர்நாடி ஆகும்.
- டிரான்ஸ்மீட்டரை வாங்குவதற்கு முன்னால் அரசுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
- இவற்றை விற்றாலும், உபயோகமற்றதாக அறிவித்தாலும் அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.
- உள்நாட்டு, வெளிநாட்டு தயாரிப்பிலான டிரான்ஸ்மீட்டர்கள் பயன்பாட்டில் உள்ளன.

# ஒலிபரப்பு சங்கிலி(*Transmission chain)*

- ஒலிபரப்பு சங்கிலியானது, *Transmitter* (டிரான்ஸ்மீட்டர்), *Antenna* (ஆண்டனா), *Feeder cable* (பீடர் கேபில்), *Tower*(கோபுரம்) ஆகியவற்றை உள்ளடக்கியது.

- இவற்றை முறையாக அமைத்தல் அவசியம்.

- தேவைக்கேற்ப, நிதி நிலைக்கு ஏற்ப அமைக்க வேண்டும்.

# ஒலிபரப்பு கருவிகளின் தரம்.

- *ஒலிபரப்பு கருவிகளின் சங்கிலியில்(Chain) குறிப்பிட்ட உபகரணங்கள் பின்வரும் சக்தியுடன் இருக்க வேண்டும்.*
- *அதிகபட்ச வீச்சுத்தன்மை – 100 W*
- *Configuration: தேவைப்படும் அளவீடு*
- *குறைந்தபட்சம் 1 அல்லது 1+1அனுமதி பெற்ற அளவு ஆண்டனா (Antenna) உயரம் கொண்டதாக இருக்க வேண்டும்.*
- *15 மீட்டர் தரை மட்டத்திலிருந்து உயரம் இருத்தல் வேண்டும்.*

# வானொலி ஒலிபரப்பு கோபுரம்.(*Tower*)

- வானொலி ஒலிபரப்பு கோபுரம் இன்றியமையாதது.
- இதில்தான் டிரான்ஸ்மீட்டர், ஒலிபரப்பி பொருத்தப்பட்டிருக்கும்.
- உரிய வல்லுநர்களைக் கொண்டு இப்பணியை செய்தல் வேண்டும்.